முருகப்பெருமான் துணை

**மகான் போகமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**18.10.2021**, திங்கட்கிழமை

1. தருமனே கலிகாலம்தனை முடித்து
தனிப்பெருங் கருணை வடிவான
ஆறுமுகனார் ஞானஉலகம் படைக்க
அவதாரம் புரிந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ துலை திங்கள்
வரங்களென முதல்திகதி சோமவாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் முதல் நாள், 18.10.2021 திங்கட்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை போகமகரிஷி யானும்
அருளுவேன் உலகோர் உலகநலம்பெற
வாசி வென்ற தலைவன் வழியில்
வணங்கிவர வையகம் மாறும்
4. மாறுதலை தருவேன் என்றுகூறி
மகத்துவம் செய்து அழைக்கும்
ஆறுமுக அரங்க ஞானித்திருவடி
ஆற்றல் கூட்டும் திருவடி ஆகும்
5. ஆகவே பணிந்து மக்கள்
அரங்கா முருகா என வேண்டி
செகத்தில் சித்தர் வழிபாட்டை
சித்திகள் அடையும்வரை செய்து
6. செய்துமே ஞானிகள் ஆகவேண்டி
சிறப்பான தருமம் கையில் எடுத்து
அய்யமற உலகெங்கும் செய்துமே
ஆறுமுகனே உலகத்தலைவனென வேண்டி
7. வேண்டியே வழிபாடு செய்து
வினவிட தருமமும் பெருக்கி
தொண்டென தொடர்ந்து வந்து
தேசிகன் அருளாசி பெற்ற மக்கள்
8. மக்களுக்கு மறுமை வெல்லும்
மகா சக்தி பலம் கிட்டும்
தேக்கமே இல்லாத வண்ணம்
தேடிவரும் சகல வகை உயர்வு

9. உயர்வான வாழ்வும் மதிப்பும்
உண்மைநிலை காணும் அறிவும்
தயவும் தனிப் பெருந் தன்மையும்
தன்னம்பிக்கை இறைவழி பெருகி

10. பெருகியே தன் குடி காப்பதுடன்
பேருலக சேமம் வேண்டியும்
குருவழி பின்பற்றி சேவை ஆற்றும்
குறைவிலா பக்குவம் கூடியும் சிறப்பர்

11. சிறப்பறிவு கண்ட மக்களாக்கி
சித்தி அருளும் அரங்கனே
மறுப்பின்றி ஆறுமுகனாக வந்த
மாதவசியாகும் மக்களை மீட்கும் ஞானியாகும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–